**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண். 454/2016**

**அ. சா– 1**

| | |
|---|---|
| பெயர்: திரு. சித்தையன் | கிராமம் : |
| த/பெ : திரு. சின்னதுரையன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of November– 2022.**

**முதல் விசாரணை:–**

நான் சின்னாயூரில் குடியிருக்கிறேன். வெள்ளி கொலுசு வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் ஆஜர் எதிரி இல்லாத 14 வது எதிரி பழனிசாமியை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். 1,2 எதிரிகள் எனது பெரியப்பா மகன்கள். பொது வழி தடத்தை பயன்படுத்துவதை தடுத்ததால் நான் சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது அ,வ, எண். 550/2015 தாக்கல் செய்து மேற்படி வழக்கில் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. கடந்த 5–8–2015ம் தேதி எதிரிகள் மீது இரும்பாலை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தேன்.

7–8–2015 ம் தேதி பிற்பக்ல 12 மணியளவில் இரும்பாலை காவல் நியலை உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகர் விசாரணைக்காக என்னையும் எதிரிகளையும் அழைத்தார். அந்த விசாரணையில் சார்பு ஆய்வாளர் பொது வழியில் ,இரு தரப்பினரும் செல்லலாம் என்று பேசி முடிவு செய்து நானும் எதிரிகளும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து விட்டு சென்று விட்டோம். எதிரிகள் காவல் நிலையத்தில் எங்களை தடுக்க மாட்டோம் என்று கூறினார்கள். 7–8–2015 ம் தேதி எதிரிகள் என் தம்பி அய்யனார் என் தங்கை மாரியம்மாள் ஆகியோரை வண்டியில் இடித்து தள்ளி காலால் உதைத்து உருட்டுக் கட்டையால் அடித்து விட்டார்கள். என் தம்பி அய்யனாரை கத்தியை எடுத்து குத்தி விட்டார்கள். இரத்தக்காயம் ஏற்பட்டதால் நான் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று புகார் கொடுத்தேன். பின்பு என் தம்பியை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். நான் எதிரிகள் மீது காவல் நிலையத்தில் கொடுத்த தட்டச்சு செய்யப்பட்ட புகார் **அ.த.சா.ஆ.1** .

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில் )

புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்ற போது என்னுடன் என் மனைவி, என் தம்பி அய்யனார், மாரியம்மாள், ஆகியோர்கள் வந்தனர். ராஜசேகர் என்பவரிடம் புகார் கொடுத்தேன். அவர் ஆய்வாளரா அல்லது சார்பு ஆய்வாளரா என்பது தெரியாது. இரும்பாலை மெயின் ரோட்டில் உள்ள ஒரு தட்டச்சு அலுவலகத்தில் உள்ள தட்டச்சரிடம் நாங்கள சொன்ன விவரத்தை அவர் தட்டச்சு செய்தார். அ.சா..அ. 1 புகாரை காவல் நிலையத்தில எந்த தேதியில் கொடுத்தேன் என்று ஞாபகம்இல்லை. போலிஸ் விசாரணையில் சம்பவத்தை நான் நேரடியாக பார்த்த விவரத்தை செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது நான் வீட்டில்

இருநதேன். சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது எதிரிகள் மாரியப்பன், சாமியப்பன் ,ராஜா, குமரேசன், கந்தையன், ஆகியோர் என் தம்பி அய்யனார், தங்கை மாரியம்மாள் ஆகியோரை அடித்துக்கொண்டிருந்தனர். என் மனைவி அலமேலுவை உருட்டுக் கட்டையால் அடித்தனர்., சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் 15 அடி துூரம் இருக்கும். 1 வது எதிரி சாமியப்பன் வீட்டிற்கு அருகில் சம்பவம் நடந்தது. 1 வது எதிரி சாமியப்பனி்ன் வீடு என் வீட்டிலிருந்து 30 அடி துூரத்திற்குள் உள்ளது. எதிரிகள் தாக்கியவுடன் காவல் நிலையத்திற்கு சென்று புாகர் கொடுத்தேன். புகார் கொடுத்த பொழுது நேரம் மாலை 4 மணி. சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தேன். 1 வது எதிரி சாமியப்பன்வீட்டிற்கு முன்பு தகராறு செய்வதற்காக நான், என மனைவி அலமேலு, சின்னதுரை மகன் அய்யனார், கோவிந்தராஜ் மகன் அய்யனார் , அய்யனார் மனைவி சமையாள், மாரியம்மாள், ஆகியோர் சென்றோம் என்றும், நான் 1 வது எதிரி சாமியப்பனை கல்லால் முன்னந்தலையில் அடித்து காயப்படுத்தினேன் என்றும், 1 வது எதிரி மயங்கி கீழே விழுந்து விட்டார் என்றும், மற்றவர்கள் 1 வது எதிரி மனைவி லட்சுமி மற்றும், 1 வது எதிரியின் மருமகள் சத்தியா ஆகியோரை கெட்ட வார்த்தைகளால் பேசி தாக்கினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி கொடுத்த புகாரின்பேரில் குற்ற எண். 300/2015 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடைபெற்ற சம்பவத்தில் நானும் எங்கள் தரப்பினரும் தான் உண்மையான குற்றவாளிகள் என்றால் சரியல்ல. 1 வது எதிரி கொடுத்த புகாரின் பேரில் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் எங்களை தாக்கியதாகவும், வாகனத்தை சேதப்படுத்தியதாகவும், கற்பனை செய்து பொய் புகார்

கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிகள் என் பங்காளிகள் என்றால் சரிதான். சம்பவ தினத்தில் 1வது எதிரி சாமியப்பன், 3 வது எதிரி லட்சுமி, 5 வது எதிரி கந்தையன் மற்றும் 1 வது எதிரியின் மருமகள் சத்தியா ஆகியோர்கள் மட்டுமே வீட்டில் இருந்தனர் என்றும் பிற எதிரிகள் வேலைக்கு சென்று விட்டனர் என்றும் சொன்னால் சரியல்ல. அ.வ.எண் 550/2015 வழக்கை நான் வாபஸ் பெற்று விட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோன்று சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகளை பழிவாங்க வேண்டி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு முதல் விசாரணை.. இல்லை.

Sd/- Tr. Siddaiyan

Sd/- Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண்.454 /2016**

**அ. சா-2**

| | |
|---|---|
| பெயர்: திரு.அய்யனார் | கிராமம் : |
| த/பெ : திரு.சின்னதுரையன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari,, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of November- 2022.**

**முதல் விசாரணை:-**

நான் சின்னாயூரில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். அ.சா.1 சித்தையன் எனதுஅண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும்., எதிரிகள் எனது உறவினர்கள். 5-8-2015ம் தேதி எதிரிகள் எங்களிடம் தகராறு செய்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்., என் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது.சொத்தை கேட்டு எதிரிகள் தகராறு செய்தார்கள். 7-8-2015 ம்தேதி போலிசார் எங்களை அழைத்து விசாரித்தனர். போலிசார் விசாரணையில் பொது தடத்தை இரு தரப்பினரும்

பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இரு தரப்பும் எழுதி கொடுத்து விட்டு வெளியே வந்து விட்டோம்., பின்பு காவல் நிலையத்திலிருந்து நானும் என் அக்கா மாரியம்மாளும் எனக்கு சொந்தமான TN –30– AJ –4611 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் வீ,ட்டிற்கு சென்று கொண்டிருந்தோம்., 1 வது எதிரி சாமியப்பன் வீட்டிற்கும 11 வது எதிரி ஆறுமுகம் வீட்டிற்கும் இடையில் உள்ள பொது தடத்தில் சென்று கொண்டிருந்தோம். 4 வது எதிரி மாரியப்பன் என் இரு சக்கர வாகனத்தை எட்டி உதைத்தார். அதனால் நானும் என் அக்கா மாரியம்மாளும் கீழே விழுந்து விட்டோம்., அப்பொழுது 3 வது எதிரி லட்சுமியும், 11 வது எதிரி ஆறுமுகமும் , 4 வது எதிரி மாரியப்பனிடம் டே போட்டுத் தள்ளுங்கடா என்று சொன்னார்கள். பின்பு 1 வது எதிரி சாமியப்பன், 2 வது எதிரி பழனியப்பன், 3 வது எதிரி லட்சுமி, 10 வது எதிரி சாந்தா., 13 வது எதிரி குமரேசன், 12 வது எதிரி ராஜா, 15 வது எதிரி ஈஸ்வரன், 14 வது எதிரி பழனிசாமி, 9 வது எதிரி கோவிந்தராஜ்,, 5 வது எதிரி கந்தையன் ஆகியோர் இருந்தனர். அப்பொழுது என் அண்ணி அலமேலு அங்கு வந்தார். எதிரிகள் 15 பேரும் உருட்டுக் கட்டையை எடுத்து என் அண்ணியின் முதுகில் அடித்ததில் என் அண்ணிக்கு முதுகு தண்டு எலும்பு முறிந்து விட்டது. 4 வது எதிரி மாரியப்பன் என்னை பார்த்து ஒழிந்து போ என்றுசொல்லி கத்தியால் கிழிச்சிட்டார். என் அண்ணன் சித்தையன் ( அ.,சா.1) பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தார். என்னையும் என் அக்காவையும் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். பின்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பில்)

4 வது எதிரி மாரியப்பன் என் இரு சக்கர வாகனத்தை எட்டி

உதைத்தார் என்றும், எனவே நானும் என் அக்கா மாரியம்மாளும் கீழே விழுந்து விட்டோம் என்றும், அவனை போட்டுத்தள்ளுங்கடா என்று 3 வது எதிரி லட்சுமி, 11 வது எதிரி ஆறுமுகம் ஆகியோர்கள் சொன்னார்கள் என்றும், எதிரிகள் 15 பேரும் சேர்ந்து உருட்டுக்கட்டையால் என் அண்ணி அலமேலுவை அடித்து எலும்பு முறிவை ஏற்படுத்தினார்என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானே கத்தியால் கிழித்து காயம் ஏற்படுத்திக்கொண்டு 4 வது எதிரி மாரியப்பன் கத்தியால் கிழித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சொத்துகேட்டு, என் அண்ணணிடம் தகராறு செய்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் 1 வது எதிரி சாமியப்பனை தாக்கினோம் என்றால் சரியல்ல. 1 வது எதிரி சாமியப்பனின் மனைவி , மருமகள் ஆகியோரை கெட்ட வார்த்தையால் திட்டி தாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் எங்கள்மீது உள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் எங்களை தாக்கியதாகவும்,இரு சக்கர வாகனத்தை சேதப்படுத்தியதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு முதல் விசாரணை..இல்லை.

Sd/- Tr. Ayyanar

Sd/- Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண்.454 /2016**

**அ. சா-3**

| | |
|---|---|
| பெயர்: திருமதி. அலமேலு | கிராமம் : |
| க/பெ : திரு.சித்தையன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari,, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of November- 2022.**

**முதல் விசாரணை:-**

நான் சின்னாயூரில் குடியிருக்கிறேன். அ.சா.1 என் கணவர். அ.சா.2 என் கொழுந்தனார். எதிரிகளை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். 5-8-2015 ம்தேதி நிலத்து பிரச்சனை சம்மந்தமாகவும், தடத்தில் போகக் கூடாது என்றும் சொன்னதற்கு புகார் கொடுத்திருந்தார்கள். 7-8-2015 ம் தேதி என் கொழுந்தனார் , அ.சா. 2 அய்யனார், மற்றும் அவரது அக்கா மாரியம்மாள் ஆகியோர் இரு சக்கர வாகனத்தில் வந்தனர். அவர்கள் இருவரையும் கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள். நான் அங்கு சென்றேன்.

என்னை கட்டையால் முதுகில் அடித்தார்கள். சம்பவ இடத்தில் எதிரிகள் சாமியப்பன், லட்சுமி, சாந்தா, ஆறுமுகம், ஈஸ்வரன், முருகன், கந்தையன், குமரேசன், ராஜா, பழனியப்பன், கோவிந்தராஜ், வெள்ளையன், அய்யனார், மாரியப்பன் ஆகியோர் இருந்தனர். என்னை 2 வது எதிரி பழனியப்பன், 8 வது எதிரி முருகன் ஆகியோர் கட்டையால் அடித்தனர். நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)

சம்பவம் நடந்த போது நான் வீட்டில் இருந்தேன் என்றால் எதிரிகள் அடித்துக்கொண்டிருக்கும் போதே அங்கு சென்று விட்டேன், நான், என் கணவர் மற்றும் 4 பேர் 1 வது எதிரி வீட்டிற்கு சென்று என் கணவர் 1 வது எதிரியின் தலையில் கல்லால் அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எல்லோரும்சேர்ந்து கல்லை எடுத்துஅடிக்கும்போது 1 வது எதிரிக்கு அடிப்பட்டிருக்கும். நான் சொன்னதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் எங்களை தாக்கி காயப்படுத்தவில்லை என்றும், எதிரிகளை பழிவாங்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்துபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு முதல் விசாரணை..,இல்லை.

Sd/- Tmt. Alamelu

Sd/- Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண்.454 /2016**

**அ. சா–4**

| | |
|---|---|
| பெயர்: திருமதி. மாரியம்மாள் | கிராமம் : |
| க/பெ : திரு.கோவிந்தராஜ் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari,, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of November– 2022.**

**முதல் விசாரணை:–**

நான் சின்னாயூரில் குடியிருக்கிறேன். அ.சா., 2 அய்யனார் என் தம்பி,. எதிரிகளை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். 5–8–2015 ம்தேதி எதிரிகள் சொத்து சம்மந்தமாக கையெழுத்து போட சொல்லி தகராறு செய்து வந்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். 7–8–2015 ம்தேதி போலிசார் எங்களை அழைத்து விசாரித்தனர். விசாரணையில் பொது தடத்தில் இரு தரப்பினரும் சென்று கொள்ளலாம் என்று பேசி முடித்து கையொப்பம் பெற்று அனுப்பி விட்டார்கள். நானும் என் தம்பி அய்யனாரும் இரு சக்கர வாகனத்தில் 1 வது எதிரி சாமியப்பன், 5

வது எதிரி கந்தையன் வீட்டிற்கும் நடுவில் உள்ள வழியில் சென்றுகொண்டிருந்தோம்., அப்பொழுது 11 வது எதிரி ஆறுமுகம் இரு சக்கர வாகனத்தை எட்டி உதைத்தார். அப்போது எதிரிகள் அனைவரும் அங்கு இருந்தார்கள். நானும்,அய்யானரும் கீழே விழுந்துவிட்டோம். எங்களை அடித்தார்கள். என்னை மயிரை இழுத்து பிடித்து முதுகில் அடித்தார்கள். கூட்டத்தில் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. . என் தம்பியை 4 வது எதிரி மாரியப்பன் உன்னை விட்டு வைக்கக்கூடாது என்று சொல்லி கத்தியால் குத்தினார். என் தம்பி இடது கையில் தடுத்தார். அதனால் இடது கையில் காயம் ஏற்பட்டது. அப்பொழுது அ.சா.1 சித்தையன், அ.சா. 3 அலமேலு ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தனர். அவர்கள் சத்தம் போட்டதால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் அங்கு வந்தனர். பின்பு 108 ஆம்புலன்ஸ்மூலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பில்)

நான், அ.சா1 சித்தையன், அ.சா.2 அய்யனார், அ.சா.,3 அலமேலு, , என் தம்பி அய்யனார் மனைவி சமையாள், என் மகன் அய்யனார் ஆகியோர் சேர்ந்து 1 வது எதிரியின் வீட்டிற்குசென்று 1 வது எதிரியை கல்லால் அடித்து காயப்படுத்தி அவர் மனைவி மற்றும் மருமகளை கெட்ட வார்த்தையால் பேசி தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. 11 வது எதிரி ஆறுமுகம் இருசக்கர வாகனத்தை எட்டி உதைத்ததாகவும, அதனால் நாங்கள் கீழே விழுந்துவிட்டதாகவும் போலிசார் விசாரணையில் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கியதில் 1 வது எதிரிக்கு மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்றார் என்றும், 1 வது எதிரி கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும்,

மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் எங்களை தாக்கி காயப்படுத்தியதாக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு முதல்விசாரணை.. இல்லை.

Sd/– Mariyammal

Sd/– Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண்.454 /2016**

**அ. சா–5**

| | |
|---|---|
| பெயர்: திரு.வெங்கடேசன் | கிராமம் : |
| த/பெ : திரு.தியாகராஜன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari,, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of November– 2022.**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தளவாய்ப்பட்டியில் குடியிருக்கிறேன். வெள்ளி கொலுசு வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 7–8–2015 ம்தேதி பிற்பகல் சுமார் 3 மணியளவில் அ.சா.1 சித்தையன் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்பொழுது எதிரிகளும் அ.சா.1 தரப்பினரும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். அ„சா.2 அய்யனாரின் இரு சக்கர வாகனத்தை உதைத்து தள்ளினார்கள். அவர் கீழே விழுந்து விட்டார்.

எதிரிகளின் உறவினர் ஒரு பாட்டியம்மாவை கீழே தள்ளி விட்டார்கள். நான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து மருத்துவமனையில் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)

அ.சா.1 சித்தையன் எனக்கு சுமார் 10 வருட பழக்கம். 7-8-2015 ம்தேதி நான் அ.சா.1 சித்தையன் வீட்டிற்குசெல்லவே இல்லை என்றும், அங்கு சென்றதாகவும், தகராறை பார்த்ததாகவும், அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு முதல் விசாரணை.. இல்லை.

Sd/- Tr.Venkatesan

Sd/- Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.